மக்கள்தொகை கணக்கெடுப்பு இரண்டாம் கட்டத்துக்கான பயிற்சி வகுப்பு

கள்ளக்குறிச்சி ஆட்சியர் தொடங்கிவைத்தார்

ASE - II POPULATION ENUMERATION - 2027
மாவட்ட மற்றும் பொறுப்பு அலுவலர்களுக்கான பயிற்சி

மக்கள்தொகை கணக்கெடுப்பு இரண்டாம் கட்டப் பணிகள் தொடர்பான பயிற்சி வகுப்பில் பேசிய மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா.

கள்ளக்குறிச்சி, அக்.15: கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027 குறித்து மாவட்ட மற்றும் பொறுப்பு அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை தொடங்கியது.

ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா தலைமை வகித்து பயிற்சியை தொடங்கிவைத்து கூறியதாவது:–

மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 இரண்டாம் கட்டப் பணிகள் தொடர்பான பயிற்சி வகுப்பு அக்.15, 16 ஆகிய தேதிகளில் மாவட்ட அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் கூடுதல் பொறுப்பு அலுவலர்களுக்கு நடைபெறுகிறது.

மேலும் உதவியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அக்.23, 24 ஆகிய தேதிகளில் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பில் மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 இரண்டாம் கட்டப் பணிகளின் போது மேற்கொள்ள வேண்டிய செயல்முறை குறித்து சென்னை மக்கள்தொகை கணக்கெடுப்பு இணை இயக்குநர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை வழங்குகின்றனர் என்றார்.

இரண்டாம் கட்டம் சுய கணக்கெடுப்பு ஜனவரி 10.01.2027 முதல் 24.01.2027 வரையும், வீடுவீடாகக் கணக்கெடுப்புப் பணி 25.01.2027 முதல் 28.02.2027 வரையும் நடைபெற உள்ளது எனத் தெரிவித்தார் ஆட்சியர்.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வளர்ச்சிப் பணிகள் ஆய்வுக் கூட்டம்...: கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா தலைமையில் ஆட்சியரக கூட்டரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா பேசியதாவது:

வடகிழக்கு பருவமழை தொடங்கி விட்டதால் விபி ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வாய்க்கால்கள் மற்றும் குளங்கள் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பணியாற்றும் பயனாளிகளுக்கு ஊதியத்தொகை எவ்வித தங்கு தடையுமின்றி, உரிய காலத்தில் சேர்வதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

பருவமழை காலத்தில் குடியிருப்புகள், பள்ளி வளாகங்கள், சாலைகள் மற்றும் பாலங்களில் மழைநீர் தேங்காமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றவும் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

தூய்மையான குடிநீர் வழங்கல், நிவாரண முகாம்களாக பயன்படுத்தப்படும் பள்ளிகளை ஆய்வு செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏரிகளின் கொள்ளளவு, கரைகள், மதகுகளை முறையாக ஆய்வு செய்யவும், நிலுவையில் உள்ள வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர். கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கி.ரமேஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்துல் கலாம் பிறந்த நாள் விழா...

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் பிறந்த நாளையொட்டி, கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நலப் பணித் திட்டத்தின் சார்பில் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்த பள்ளித் தலைமை ஆசிரியர் மோ.கலாபன். உடன் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பொ.இராமச்சந்திரன், ஆசிரியர்கள் ஜெரால்டு மெர்ஜில்லா, அலெக்சாண்டர், மகேந்திர முருகன் உள்ளிட்டோர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டத்துக்குள்பட்ட சின்னகொள்ளியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அப்துல் கலாம் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து, கலாமின் சாதனைகளை மாணவ, மாணவிகளுக்கு எடுத்துரைத்த தலைமை ஆசிரியர் மொ.பழனிச்சாமி.

செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்ற திண்டிவனம் மாவட்டக் கல்வி அலுவலர் ரகு, செஞ்சி மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ராதிகா, பள்ளி தலைமை ஆசிரியர் தேவதாஸ், செஞ்சி அப்துல் கலாம் அகாதமி கல்வி நிறுவன முதுநிலை வருவாய் ஆய்வாளர் கண்ணன் உள்ளிட்டோர்.

மின்வாரியத் தொழில்சங்கத்தினர் உள்பட பல்வேறு அமைப்பினர் போராட்டம்

விழுப்புரம், அக்.15: விழுப்புரத்தில் மின் வாரியத் தொழில்சங்கத்தினர் உள்பட பல்வேறு அமைப்பினர் கோரிக்கைகளை வலியுறுத்தி வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விழுப்புரத்தில் மின் வாரியத் தொழில்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர் வியாழக்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மின் வாரியம் அறிவித்துள்ள ஸ்மார்ட் மீட்டர் ஒப்பந்த அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டும். மின் உற்பத்தி மற்றும் வழித்தட மின்திட்டங்களை பொதுமக்கள்– தனியார் பங்களிப்பு முறையில் தனியார்மயமாக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும். அரசு ஊழியர்களுக்கான பணிக்கொடைத் தொகையை ரூ.20 லட்சத்திலிருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்கியது போன்று மின் வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

விழுப்புரம் கிழக்கு பாண்டி சாலையிலுள்ள மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, தொழிலாளர் சம்மேளன திட்டச் செயலர் சி.நாகராஜன் தலைமை வகித்தார். திட்டப் பொருளாளர் எம்.சேகர், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) திட்டத் தலைவர் ஆர்.சேகர், செயலர் அருள், அசோக்குமார், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் திட்டச் செயலர் ஏ.சண்முகம், தலைவர் அனில்குமார், தமிழ்நாடு மின் வாரிய எம்ப்ளாய்ஸ் பெடரேஷனின் மண்டலச் செயலர் ஆர். செந்தில்வேல் உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து, கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி மின்வாரியத் தொழில்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழுவினர் முழக்கங்களை எழுப்பினர்.

அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் கழகத்தினர்: விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் கழகத்தினர் வாயில்முழக்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்துக்குப் பதிலாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் முழுமையான நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்துக்கு தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் கிளைச் செயலர் சி.சச்சிதானந்தம் தலைமை வகித்தார். கூட்டு நடவடிக்கைக் குழு உறுப்பினர் வே.விஜயரங்கம், கிளை துணைத் தலைவர் லட்சுமணன், கிளைப் பொருளாளர் கோ.சேகர் உள்ளிட்ட நிர்வாகிகள், மூத்த உறுப்பினர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் சங்கத்தினர்: விழுப்புரத்தில் தமிழ்நாடு ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் சங்கத்தினர் தர்னாவில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் 70 வயது நிறைவடைந்த ஓய்வூதியர்களுக்கு 10 சதவீதம் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். தனியார் மருத்துவமனைகள், காப்பீட்டு நிறுவனங்களின் முறையற்ற நிபந்தனைகளைத் தடுத்து நிறுத்தி, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் முழுமையான கட்டணத்தை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி, இந்த தர்னா போராட்டம் நடத்தப்பட்டது.

விழுப்புரம் நகராட்சித் திடலில் நடைபெற்ற தர்னாவுக்கு தமிழ்நாடு ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர். கலியமூர்த்தி தலைமை வகித்தார். விழுப்புரம் வட்டத் தலைவர் கா. மதியழகன், செயலர் இர.சின்னசாமி, பொருளாளர் பெ.சரவணன் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் ஆர்.உமாச்சந்திரன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் பா.சரவணபாண்டியன், துணைத் தலைவர் கே.தமிழ்ச்செல்வி, இணைச் செயலர் எஸ். ஆனந்தன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் நா.முனுசாமி, ஜெசிந்தாமேரி உள்ளிட்டோர் பேசினர்.

ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி மதிப்பெண்ணை 35–ஆக நிர்ணயம் செய்ய வேண்டும்

தமிழகப் பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டணி வலியுறுத்தல்

விழுப்புரம், அக்.15: பணிபுரியும் ஆசிரியர்களுக்கான தகுதித்தேர்வின் தேர்ச்சி மதிப்பெண்ணை 35–ஆக நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தமிழகப் பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டணி அரசை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து இந்த சங்கத்தின் மாநில பொதுச் செயலர் ச.செல்லையா விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த ஜூலை 4, 5–ஆம் தேதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. தாள் 1, 2 என இரண்டிலும் 1,11,683 ஆசிரியர்கள் தேர்ச்சி பெறவில்லை.

இந்த தேர்வு ஆசிரியர்கள் தங்கள் பணியில் தொடர்வதற்கான தேர்வே தவிர, புதிய பணி நியமனத்துக்கானது அல்ல. எனவே, இத்தேர்வை எழுதும் அனைவருக்கும் தேர்ச்சி மதிப்பெண்ணை 35–ஆக நிர்ணயிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் பணிக்காலத்துக்கு ஏற்பவும், ஆசிரியர்களின் கல்வித்தகுதியின் அடிப்படையிலும் வெயிட்டேஜ் மதிப்பெண்கள் வழங்க வேண்டும்.

இதற்குரிய நடவடிக்கையை தமிழக முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

பைக் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

விழுப்புரம், அக்.15: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே நிகழ்ந்த பைக் விபத்தில் இளைஞர் நிகழ்விடத்திலேயே வியாழக்கிழமை உயிரிழந்தார்.

திண்டிவனம்வட்டம், மேல்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் ர.திலீப்குமார் (31), கொத்தனார். இதே பகுதியைச் சேர்ந்தவர் கா.சுப்பிரமணி (60). உறவினர்களான இவர்கள் இருவரும் வியாழக்கிழமை திண்டிவனம் – செஞ்சி நெடுஞ்சாலையில் திண்டிவனத்தை அடுத்த செட்டிக்குட்டை அருகே பைக்கில் சென்று கொண்டிருந்தனர். ரகோத்தமன் பைக்கை ஓட்டினார்.

அப்போது, பைக் நிலை தடுமாறியதில் இருவரும் கீழே விழுந்த நிலையில், திலீப்குமார் பலத்த காயமடைந்து நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்த புகாரின்பேரில், ரோஷணை போலீஸார் வியாழக்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

சிறிய அளவிலான தனியார் வேலைவாய்ப்பு முகாம்: விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகம், காலை 10, ஏற்பாடு: வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் சுற்றியுள்ள இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகள் தொடர்பான படங்களை கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள், நிகழ்ச்சியில் பங்கேற்போர் அல்லது வாசகர்கள் அனுப்பலாம்.

dinedlvpm@gmail.com

செம்மணூர் கிரெடிட்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ரெஜிஸ்டெரெட் ஆபீஸ், 3 வது மாடி, அவென்யூ டவர், ஈஸ்ட் போர்ட், திருச்சூர் , கேரளா- 680005
CIN-U65923KL2008PLC023560

ஏல அறிவிப்பு

பதிவுத் தபால் மூலம் தனித்தனியாக அறிவிப்பு அனுப்பப்பட்டும், தங்கள் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்கத் தவறிய மற்றும் 30-09-2026 தேதியில் நிலுவையில் உள்ள பல்வேறு கிளைகளின் தங்கக் கடன் கணக்குகளுக்குரிய நகைகளை பொது ஏலத்தில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் மாவட்ட அளவிலான ஏல மையங்களில் நடைபெறும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், ஏலம் நடைபெறும் தேதிக்கு ஒரு நாளுக்கு முன்னதாகவே நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் ரூ.5,00,000/-க்கான முன்பணத்தை (EMD) செலுத்த வேண்டும்; அத்துடன் தங்கள் பான் (PAN) அட்டை மற்றும் செல்லுபடியாகும் புகைப்படத்துடன் கூடிய அடையாளச் சான்றை சமர்ப்பிக்க வேண்டும். ஏலதாரர்களின் தகுதி அல்லது எண்ணிக்கை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், முன்பணம் (EMD), ஏலத்தை இறுதி செய்தல் போன்றவை குறித்த நிறுவனத்தின் முடிவே இறுதியானது மற்றும் கட்டுப்படுத்தக்கூடியது. போதுமான எண்ணிக்கையிலான ஏலதாரர்கள் பங்கேற்காத பட்சத்திலோ, அடிப்படைத் தொகை கிடைக்காத நிலையிலோ அல்லது வேறு ஏதேனும் தகுந்த காரணங்களுக்காகவோ ஏலத்தை ஒத்திவைக்கவோ அல்லது ஏலம் நடைபெறும் இடத்தை மாற்றவோ நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:- 8606344949 or 8111865577

இடம்: காட்டுமன்னார்கோவில் தேதி: 19-11-2026 | நேரம்: காலை 10:00 மணி காட்டுமன்னார்கோவில் : 1118, 39, 1227, 68, 69, 76, 78, 81, 1302, 20, 44, 51, 52, 72, 79, 88, 91, 92, 95, 97, 98, 1400, 02, 03, 04, 05, 09, 13, 14, 15, 16, 17, 18, 19, 24, 25, 26, 28, 29, 31, 32, 33, 38, 45, 47, 48, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 59, 60, 61, 62, 64, 65, 66,70, 74, 81, 87, 88, 89, 90, 91, 92. வடலூர் : 431, 37, 38, 40, 41, 42, 45, 47, 48, 50, 52, 54, 55, 57, 59, 65, 68, 69, 74, 75, 82, 84, 86, 87, 94, 95, 96, 512, 13, 14, 15. இடம்: மயிலாடுதுறை தேதி: 19-11-2026 | நேரம்: பிற்பகல் 2:00 மணி கொள்ளிடம் : 535, 44, 46, 49, 50, 52, 54, 55, 60, 70, 74, 75, 77, 78, 80, 86, 87, 88, 89, 95, 96, 98,99, 602, 03, 06, 07, 09, 11, 13, 14, 16, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 39, 42, 44, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 58, 59, 61, 62, 64, 65, 66, 69, 70, 74, 75, 77, 85, 88, 90, 91, 92, 94, 95, 96, 97, 99, 700, 02, 03. குத்தாலம்: 1495, 1549, 52, 53, 67, 88, 89, 91, 99, 1604, 05, 06, 09, 18, 20, 21, 25, 40, 41, 42, 47, 51, 59, 60, 63, 74, 79, 81, 82, 83, 88, 90, 91, 92, 95, 96, 99, 1701, 04, 05, 08, 10, 14, 20, 21, 22, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 34, 35, 36, 37, 38, 39, 40, 60, 61, 63, 64, 68, 69, 70, 71,77, 78, 83, 85, 89, 90, 95, 99, 1803, 08, 13, 14, 19, 20, 21, 22. மயிலாடுதுறை : 1304, 51, 66, 1415, 45, 56, 57, 60, 62, 69, 70, 71, 72, 73, 77, 79, 83, 86, 90, 91, 93, 98, 1501, 02, 04, 06, 07, 08, 09, 13, 14, 15, 16, 17, 18, 20, 21, 25, 26, 28, 31, 32, 33, 34, 36, 40, 42, 43, 49, 50, 51, 52, 53, 56, 57, 58, 59, 60, 61, 62, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 76, 90. செம்பனார்கோவில்: 995, 96, 1013, 78, 96, 1102, 03, 04, 12, 20, 44, 47, 55, 58, 59, 72, 75, 79, 87, 96, 1200, 01, 02, 10, 17, 20, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 73, 76, 77, 78, 79, 81, 82, 83, 84, 85, 90, 94, 95, 96, 98, 1300. சீர்காழி: 750, 52, 60, 68, 75, 85, 88, 809, 16, 21, 28, 32, 39, 44, 49, 51, 52, 55, 71, 73, 74, 75, 77, 78, 79, 80, 83, 87, 88, 89, 92, 93, 96, 98, 99, 900, 01, 02, 05, 07, 08, 11, 12, 13, 14, 15, 17, 18, 21, 22, 25, 26, 27, 29, 33, 37, 41, 45, 46. இடம்: ஜெயங்கொண்டம் தேதி: 20-11-2026 | நேரம்: காலை 11:00 மணி ஆண்டிமடம் : 657, 69, 86, 88, 90, 91, 92, 94, 98, 99, 700, 04, 07, 08, 11, 12, 15, 16, 19, 20, 21, 22, 24, 26, 27, 28, 31, 33, 34, 35, 39, 40, 42, 43, 44, 46, 47, 51, 52, 53, 58, 64. ஜெயங்கொண்டம் : 1706, 12, 23, 32, 80, 86, 89, 94, 99, 1809, 13, 17, 45, 47, 50, 53, 54, 55, 56, 57, 58, 61, 64, 65, 66, 72, 79, 81, 83, 87, 92, 97, 98, 1901, 04, 05, 07, 08, 17, 18, 23, 24, 26, 34, 35. உடையார்பாளையம் : 494, 33, 34, 48, 53, 54, 66, 75, 77, 82, 85, 89, 91, 502, 05, 06, 08, 09, 11, 12, 13, 17, 19, 20, 22, 23, 27, 30, 31, 33, 34, 35, 36, 37, 38, 39, 42, 43, 46, 48, 49, 50, 52, 55, 58, 59, 64, 66, 67, 68, 70, 71, 76, 80, 81, 84, 86, 87. இடம்: தஞ்சாவூர் தேதி: 21-11-2026 | நேரம்: காலை 10:00 மணி அடுதுறை : 880, 82, 92, 97, 900, 01, 04, 11, 16, 19, 25, 28, 29, 31, 32, 34, 40, 42, 53, 56, 57, 58, 59, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 81, 82, 83, 84, 85, 86, 89, 90, 91, 94, 95, 96, 97, 1000, 02, 07, 10, 11, 12, 14, 15, 19, 20, 22, 23, 24, 29, 30, 37, 43, 44. அய்யம்பேட்டை: 719, 50, 67, 76, 78, 84, 91, 809, 15, 24, 25, 30, 33, 40, 42, 51, 52, 56, 59, 60, 62, 65, 66, 74, 77, 82, 85, 86, 87, 90, 91, 93, 95, 99, 900, 03, 11, 12, 13, 17, 18, 19, 21, 22, 24, 25, 27, 29, 30, 35, 42, 54, 59. கும்பகோணம்: 498, 520, 26, 35, 60, 62, 82, 85, 86, 87, 89, 91, 620, 21, 22, 23, 24, 25, 26, 27, 30, 32, 33, 35, 36, 37, 38, 39, 40, 42, 43, 46, 47, 48, 49, 50, 54, 55, 56, 57, 64, 70. மேலகபிஸ்தலம்: 505, 06, 07, 08, 14, 28, 33, 34, 38, 50, 51, 52, 72, 74, 77, 80, 81, 83, 84, 89, 90, 91, 92, 93, 96, 97, 608, 09, 10, 12, 14, 15, 16, 18, 20, 21, 23, 24, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 41, 42, 43, 44, 45, 48, 49, 56. செங்கிப்பட்டி: 988, 1035, 67, 78, 79, 90, 91, 92, 93, 1101, 02, 03, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 23, 27, 29, 30, 31, 32, 33, 36, 37, 42, 45, 46, 48, 52, 53, 58, 59, 60, 65, 67, 68, 71, 72, 73, 74, 75, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 90, 91, 94, 96, 97, 1201, 02, 04, 05, 07, 08, 11, 12, 13, 16, 19, 20, 23, 25, 26, 27, 28, 30, 31, 32, 34, 35, 37, 40, 47, 48, 51, 52. தஞ்சாவூர்: 545, 48, 53, 67, 68, 71, 73, 75, 76, 92, 95, 98, 602, 05, 11, 12, 24, 27, 28, 29, 30, 32, 34, 36, 41, 42, 46, 47, 49, 50, 53, 55, 58, 59, 60, 61, 66, 68, 69, 70, 71, 75, 76, 77, 79, 80, 81, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 97, 98, 702, 06, 07, 08, 09, 11, 14, 18, 19, 20, 26, 27, 28. இடம்: காட்டூர் தேதி: 21-11-2026 | நேரம்: பிற்பகல் 2:00 மணி காட்டூர் : 725, 33, 35, 40, 41, 50, 51, 53, 55, 56, 62, 63, 64, 69, 70, 71, 72, 79, 84, 88, 90, 91, 92, 93, 94, 95, 99, 801, 09, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 21, 23, 25, 26, 27, 30, 36, 40, 41, 42.

மேலே குறிப்பிட்டபடி ஏலம் வெற்றிகரமாக முடிவுசெய்ய இயலாத பட்சத்தில் அடகு வைத்த நகைகள் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் மறு ஏலம் செய்யப்படும்.

மறு ஏல மையங்கள்:

கடலூர், மயிலாடுதுறை மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள கிளைகளுக்கு- மயிலாடுதுறை கிளை, தேதி: 24-11-2026, நேரம்: 11 AM
தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளிமாவட்டங்களில் உள்ள கிளைகளுக்கு- காட்டூர் கிளை, தேதி: 25-11-2026, நேரம்: 11 AM

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூரு-560095.
கிளை அலுவலகம்: எண்.25, 25A & 26, தரைத்தளம், சாவடி சாலை, பாப்புநாயக்கன் திருப்பாபுலியூர், கடலூர், தமிழ்நாடு - 607002

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் எனஇதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	13.10.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
160821886000006 & 1608210090000001 1.Mr.செல்வதுரை C 2.Mrs.வனிதா	(i) 19.04.2021 & 17.04.2022 அன்றுள்ளபடி ₹ 32,63,447/- (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்து ஏழு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.12.2022 & நேரடி சுவாதீனம் - 28.04.2026	₹ 58,03,415/- (ரூபாய் ஐம்பத்து எட்டு லட்சத்து மூன்றாயிரத்து நானூற்று பதினைந்து மட்டும்)	₹ 26,65,000/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ 2,66,500/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், காடாம்புலியூர் சார்பதிவு எல்லைக்குட்பட்ட பண்ருட்டி பஞ்சாயத்து யூனியன் எல்லை, கடலூர் மாவட்டம் என்னும் முகவரியில் நத்தம் புதிய சர்வே எண்.109/16-00355 சதுர மீட்டர், அதற்கு தொடர்புடைய பழைய சர்வே எண்.294, அதற்கு தொடர்புடைய புதிய சர்வே எண்.109/1-1.41.5, இதில் 1வது அளவுகள் கிழக்கு மேற்காக இருதிசையிலும் 70.78 அடி, தெற்கு வடக்காக இருதிசையிலும் 41 அடி, மொத்தம் 2902 சதுர அடி. 2வது அளவுகள் கிழக்கு மேற்காக இருதிசையிலும் 27 அடி, தெற்கு வடக்காக இருதிசையிலும் 34 அடி, மொத்தம் 918 சதுர அடி. ஆகமொத்த பரப்பு 3820 சதுர அடி (அதாவது) 00355 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதில் செங்கற்களால் கட்டப்பட்டுள்ள A.C.C கூரையிட்ட குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடம், அதனுடன் மின்சார இணைப்புகள், பொருத்தப்பட்டுள்ளவைகள், டெபாசிட்டுகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ரெங்கநாதன், கலியபெருமாள் ராமசந்திரன் மனைக்கு கிழக்கு, ரோடு மற்றும் கோதண்டம் மனைக்கு மேற்கு, ராஜபாண்டியன், சண்முகம் மற்றும் கோதண்டம் மனைக்கு தெற்கு, ராமசந்திரன், கலியபெருமாள் மனைக்கு வடக்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 05.11.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி:	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
04.11.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	03.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 16.10.2026
ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

SBI பாரத ஸ்டேட் பாங்கு
STATE BANK OF INDIA RASMECC (10324)
நெ.7, ஜெய்கிருஷ்ணா பிளாசா, முதல் மாடி, ஐய்யனார் கோவில் மெயின் ரோடு , எல்லைபிள்ளைச்சாவடி, புதுச்சேரி-605005
மின்னஞ்சல்: sbi.10324@sbi.co.in, போன்: 0413-2233810.

அசையா சொத்து கையகப்படுத்தும் அறிவிப்பு விதி 8(1)

இதனடியில் கையொப்பமிட்டுள்ளவர் பத்திரமயமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டம் 2002–ன் கீழ் பாரத ஸ்டேட் பாங்கு, RASMECC கிளை, புதுச்சேரி அதிகாரம் பெற்ற அதிகாரி என்ற முறையிலும் அதன் பிரிவு 13(12) விதி 3 மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) சட்டம் 2002–ன் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்படி பாங்கின் ஈட்டுறுதி பெற்று கடன் கொடுத்தவர் என்ற முறையிலும், ஈட்டுறுதி அளித்த கடனாளிகள்: M/s. சுப்ரீம் கோட்டர்ஸ் & ஃபேப்ரிகேட்டர்ஸ் (பங்குதாரர்கள். திரு. P பூபதி & திரு. P.சரவணன் த/பெ. திரு. பக்கிரிசாமி) சொத்து முகவரி எண் 265/15 திருக்காஞ்சி சாலை, கணுவாப்பேட்டை, புது நகர், புதுச்சேரி–605110 & ஸ்ரீ. பி பூபதி & திரு. P. சரவணன் த/பெ திரு. பக்கிரிசாமி (பங்குதாரர்கள்) வீட்டு முகவரி எண்:7 4வது குறுக்குத் தெரு, அண்ணா நகர், நெல்லித்தோப்பு அஞ்சல், பாண்டிச்சேரி – 605005, மற்றும் எண்:17, 3வது குறுக்குத் தெரு, சுப்பையா நகர், உருளையன்பேட், புதுச்சேரி 605001 இல் வசிக்கிறார்., கேட்பு அறிவிக்கை அனுப்பியபோது கடன் தொகை 07.08.2026 அன்று CC Rs.24,82,325/- (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்தி ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, இதர கட்டணங்கள், செலவினங்கள் கடன் கேட்பு அறிவிக்கை 07.08.2026 அன்று அனுப்பி, கிடைக்கப் பெற்ற 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தார்.

மேற்கூறப்பட்ட கடனாளிகள் அவ்வாறு கடன் தொகையை செலுத்தத் தவறியதால் கடனாளி மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழே கையொப்பமிட்டவர் மேற்படி சட்டப் பிரிவு 13(4) மற்றும் விதி 8–ன் கீழ் இவற்றில் தனக்களித்துள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சுவாதீனத்தை 15.10.2026 அன்று பெற்றுக் கொண்டுவிட்டார்.

இதனால், குறிப்பாக கடனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிப்பதாவது, இச்சொத்தினை யாரேனும் பரிவர்த்தனை செய்ய விரும்பும் பட்சத்தில் அது பாரத ஸ்டேட் பாங்கு–க்கு சேர வேண்டிய கடன் தொகை 15.10.2026 அன்று CC Rs. Rs.24,82,325/- (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்தி ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவினங்கள் ஆகியவை கட்டுப்படுத்துவதாகவே அமையும் என்பதாகும்.

அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தை மீட்பதற்கான நேர அவகாசத்திற்கு பிரிவு 13வது சட்டத்தின் பிரிவு (8) ல் வழங்கப்பட்டுள்ள விதிகளை கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

அசையா சொத்து விபரம்:

ஆவணம் எண் 1827/1993–க்கான விவரம்: புதுச்சேரி பதிவு மாவட்டம், வில்லியனூர் சார்–பதிவு மாவட்டம், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட, கிராம எண் 32, வில்லியனூர் வருவாய் கிராமம், நில அளவை பத்திரத்தின்படி R.S.No.265/15, கதாஸ்தர் எண் 901, 902 Survey settlement R.S.No.265/15/A , மனையின் விஸ்தீரணம் 13 குழிகள் 10 வீசங்கள் அல்லது 7848 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் இந்த அடமானத்தில் உள்ளது.
எல்லைகள்: கிழக்கே திருக்காஞ்சி சாலை; மேற்கே பூங்காவன கவுண்டர் நிலம்; வடக்கே புருஷோத்தமன் நிலம்; தெற்கே சிவராமலு செட்டியார் நிலம்.

ஆவணம் எண் 1859/1993க்கான விவரம்: புதுச்சேரி பதிவு மாவட்டம், வில்லியனூர் சார்–பதிவு மாவட்டம், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து எல்லைக்குள், கிராம எண் 32, வில்லியனூர் வருவாய் கிராமம். நில அளவை பத்திரத்தின்படி R.S.No.265/15, கதாஸ்தர் எண் 901, 902, Survey settlement R.S.No.265/15/A மனையின் விஸ்தீரணம் 13 குழிகள் 10 வீசங்கள் அல்லது 7848 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் இந்த அடமானத்தில் உள்ளது
எல்லைகள்: கிழக்கே திருக்கஞ்சி சாலை; மேற்கே பூங்காவன கவுண்டர் நிலம்; வடக்கே ஜனார்த்தனன் நிலம்; தெற்கே பூபதி நிலம்.

இச்சொத்து திரு. P பூபதி த/பெ. திரு. பக்கிரிசாமி என்பவருக்கு சொந்தமானது. நிலம், கட்டிடங்கள் மற்றும் அனைத்து இணைப்புகளும் உள்ளடங்கியது.

இடம்: பாண்டிச்சேரி
தேதி : 15.10.2026
அதிகாரம் பெற்ற அதிகாரி
பாரத ஸ்டேட் பாங்கு

TAMIL NADU ZARI LIMITED
(A Government of Tamil Nadu Undertaking)
INDUSTRIAL ESTATE, ORIKKAI, KANCHEEPURAM - 631 502

TENDER PUBLISHING NOTICE

E-tender has been published in Tamilnadu Government e-tender Portal "https://tntenders.gov.in" for Purchase of Gold Bar (999 Purity).

Approximate Quantity : 1 Kgs
Conditions : As Stipulated in Tender Schedule available in the above web portal.
Bid Upload Starting Date & Time : 4.00 P.M on 15.10.2026
Last date & Time of Bid upload : Upto 10.30 A.M on 27.10.2026
Opening of Bids online : At 11.00 A.M on 27.10.2026

Managing Director
(Tender Inviting Authority)
Tamil Nadu Zari Ltd.,
Kancheepuram

Place : Kancheepuram
Date : 15.10.2026
DIPR/ 3141 /TENDER/2026

கூட்டுறவே! நாட்டுயர்வு!!
வி.டி.730 கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் லிட்.,
கலசப்பாக்கம்–606751, திருவண்ணாமலை மாவட்டம்

பொதுப்பேரவைக்கூட்ட அறிவிப்பு

அன்புடையீர் ! வணக்கம்.

வி.டி.730 கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தின் பொதுப்பேரவைக் கூட்டம் **2026-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணியளவில் சங்க அலுவலகத்தில்** நடைபெற உள்ளது. அது சமயம் கீழ்காணும் பொருட்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. அனைத்து "அ" வகுப்பு அங்கத்தினர்களும் இப்பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்கள்

1. 2025-2026 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை அறிக்கையினை வாசித்து அங்கீகரித்தல்.
2. சங்கத்தின் 2025-2026-ம் ஆண்டின் நிகர இலாபம் ரூ.16,93,529.05-ஐ சங்க விதிகளுக்கு உட்பட்டு இலாப பங்கீடு செய்வது குறித்து ஆலோசித்தல்.
3. 2025-2026-ம் ஆண்டிற்கான சிக்கன சேமிப்பு வட்டி மற்றும் பங்கு ஈவு தொகை சங்க அங்கத்தினர்களுக்கு வழங்க ஆலோசித்தல்.
4. 2026-2027-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு–செலவு திட்டத்தினை அங்கீகரித்தல்.
5. சங்க செயலாட்சியரால் கொண்டு வரப்படும் இதர தீர்மானங்கள் குறித்து ஆலோசித்தல்.

குறிப்பு : 2025-2026-ம் ஆண்டில் சங்கம் எய்திய நிகர இலாபத்தினை பங்கீடு செய்து "அ" வகுப்பு அங்கத்தினர் அவர்களின் வங்கி சேமிப்பு கணக்கு மூலம் பங்கு ஈவுத் தொகை மற்றும் சிக்கன சேமிப்பு வட்டி வழங்கப்படும்.

திரு.செ.வெங்கடேசன்
உதவியாளர் / செயலாளர் (பொ)

திரு.செ.சரவணன்
கூட்டுறவு சார்பதிவாளர் / செயலாட்சியர்